## யூன் – 09 – சனி
### மரியாவின் மாசற்ற இருதயம்

**“எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே” (2 திமொ 4:8)**

**முதல் வாசகம்2 திமோத்தேயு 4 : 1 – 8**

கடவுள் முன்னிலையிலும் வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பு அளிக்கப்போகிற கிறிஸ்து இயேசு முன்னிலையிலும் அவர் தோன்றப்போவதை முன்னிட்டும் அவரது ஆளுகையை முன்னிட்டும் நான் ஆணையிட்டுக் கூறுவது. இறைவார்த்தையை அறிவி. வாய்ப்புக் கிடைத்தாலும்இ கிடைக்காவிட்டாலும் இதைச் செய்வதில் நீ கருத்தாயிரு. கண்டித்துப்பேசு. கடிந்துகொள் அறிவுரை கூறு. மிகுந்த பொறுமையோடு கற்றுக்கொடு. ஒருகாலம் வரும். அப்போது மக்கள் நலந்தரும் போதனையைத் தாங்கமாட்டார்கள். மாறாக, செவித்தினவு கொண்டவர்களாய்த் தங்கள் தீய நாட்டங்களுக்கேற்பத் தங்களுக்கெனப் போதகர்களைத் திரட்டிக் கொள்வார்கள்.உண்மைக்குச் செவிசாய்க்க மறுத்துப் புனைகதைகளை நாடிச்செல்வார்கள்.நீயோ அனைத்திலும் அறிவுத் தெளிவோடிரு. துன்பத்தை ஏற்றுக்கொள் நற்செய்தியாளனின் பணியை ஆற்று. உன் திருத்தொண்டை முழுமையாய்ச் செய்.ஏனெனில், நான் இப்போதே என்னைப் பலியாகப் படைக்கிறேன். நான் பிரிந்து செல்லவேண்டிய நேரம் வந்துவிட்டது.நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன் என் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே. அதை இறுதிநாளில் ஆண்டவர் எனக்குத் தருவார் நீதியான அந்த நடுவர் எனக்கு மட்டுமல்ல, அவர் தோன்றுவார் என விரும்பிக் காத்திருக்கும் அனைவருக்குமே தருவார்.

**பதில்பாடல் :** ஆண்டவரை முன்னிட்டு என் இதயம் மகிழ்கிறது.

**நற்செய்தி : லூக்கா 2 : 41 – 51**

ஆண்டுதோறும் இயேசுவின் பெற்றோர் பாஸ்கா விழாவைக் கொண்டாட எருசலேமுக்குப் போவார்கள். இயேசுவுக்குப் பன்னிரண்டு வயது ஆனபோது, வழக்கப்படி விழாவைக் கொண்டாட எருசலேம் சென்றனர்.விழா நாள்கள் முடிந்து அவர்கள் திரும்பியபோது, சிறுவன் இயேசு எருசலேமில் தங்கிவிட்டார். இது அவருடைய பெற்றோருக்குத் தெரியாது. பயணிகள் கூட்டத்தில் அவர் இருப்பார் என்று எண்ணினர். ஒருநாள் பயணம் முடிந்தபின்பு உறவினரிடையேயும் அறிமுகமானவர்களிடையேயும் அவரைத் தேடினர். அவரைக் காணாததால் அவரைத் தேடிக்கொண்டு எருசலேமுக்குத் திரும்பிச் சென்றார்கள்.மூன்று நாள்களுக்குப்பின் அவரைக் கோவிலில் கண்டார்கள். அங்கே அவர் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டும் அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக் கொண்டுமிருந்தார்.அவற்றைக் கேட்ட அனைவரும் அவருடைய புரிந்து கொள்ளும் திறனையும் அவர் அளித்த பதில்களையும் கண்டு மலைத்துப் போயினர்.அவருடைய பெற்றோரும் அவரைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர். அப்பொழுது அவருடைய தாய் அவரை நோக்கி, ”மகனே, ஏன் இப்படிச் செய்தாய்? இதோ பார், உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக்கொண்டிருந்தோமே” என்றார்.அவர் அவர்களிடம் ”நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்கவேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?” என்றார்.அவர் சொன்னதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.பின்பு அவர் அவர்களுடன் சென்று நாசரேத்தை அடைந்து அவர்களுக்குப் பணிந்து நடந்தார். அவருடைய தாய் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தமது உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார்.இயேசு ஞானத்திலும் உடல்வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்.

**தியானம்:** இன்று மரியாளின் மாசற்ற இருதயத்தை திருச்சபை நினைவு கூருகின்றது. யேசு இவ்வுலகிற்கு வர பாலமாக திகழ்ந்தவர் அன்னை மரியா. பிறப்பு முதல் இறப்புவரை, மாட்டுத்தொழுவம் தொடங்கி கல்வாரி மலைவரை கூடவே பயணப்பட்டவர் அவர். நற்செய்தியில் பார்ப்பதுபோல் மகனைக் காணாது கண்ணீரோடு தேடி அலைந்தவர். கற்கள், முட்கள் நிறைந்த பாதைகளை தமது மகனுக்காக ஏற்றுக் கொண்டவர். இவ்வுலகிற்காக பலியாக்கப்பட்டவரை சிலுவையின் அடியில் கண்ணீரோடு நின்று பார்த்து கதறியவர். குழந்தையாக மடியில் தவழ்ந்தவரை உயிர் அற்ற உடலாக மடியில் சுமந்தவர். இன்றும் எத்தனையோ தாய்மார் தமது பிள்ளைகளுக்காக அழுகிறார்கள். தமது பிள்ளைகள் பாதை தவறிப்போனதால், மது போதைக்கு அடிமை ஆனதால், செய்யாத குற்றத்திற்காக தண்டிக்கப் படுவதால், தீராத நோயினால் பீடிக்கப்பட்டதால் கலங்கி நிற்கிறார்கள். பிள்ளைகளால் கைவிடப்பட்டு அனாதை இல்லங்களில் அன்பிற்காக ஏங்கித்தவிக்கின்றார்கள். அன்பை, தியாகத்தை அன்னையரிடம்தான் காண முடியும். உதிரத்தை பாலாக்கி, தமது சுகத்தைவிட பிள்ளைகளின் முன்னேற்றம்தான் முக்கியம் என்று எல்லாவற்றையும் துறப்பவர்கள் அவர்கள். எதிர்பார்ப்பு இல்லாதது தாய்மை. மறுபுறம் பட்டம், பதவிக்காக பெற்ற பிள்ளைகளை மறந்து தமது சுக போகங்களைத்தேடி செல்லும் தாய்மாரும் வாழும் உலகம் இது. அண்மையில்கூட ஒரு 23 வயது தாய் தாம் பெற்ற 2 மாத பெண் குழந்தையை கத்தியால் குத்தி கொலை செய்துவிட்டு, குப்பைத்தொட்டியில் வீசிய சம்பவம் கியூபெக்கில் இடம்பெற்றது. இந்த இரு வேறு நிலைகளில் நாம் யார்? அன்னை மரியா இவ்வுலக அன்னையருக்கு ஒரு முன்மாதிரி. அவரின் அடியொற்றி வாழ்வோமா?